பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
28 12 2025 SUNDAY 7 15 AM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மாநில தலைமைச்செயலாளர்கள் மாநாட்டின் நிறைவுநாள் அமர்வு இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெறவுள்ளது.
- இண்டிகோ விமான நிறுவனத்தின் சேவைகளில் அண்மையில் ஏற்பட்ட இடையூறுகள் குறித்து விசாரணை நடத்திய குழு, தனது அறிக்கையை மத்திய அரசிடம் தாக்கல் செய்துள்ளது.
- ஜம்மு காஷ்மீரின் ஜம்மு பகுதியில் பதுங்கியுள்ள பாகிஸ்தானிய பயங்கரவாதிகளை தேடி அழிக்கும் பணியில் இந்திய ராணுவம் ஈடுபட்டுள்ளது.
- மியான்மரில் ராணுவ நிர்வாகத்தின் கீழ், இன்று பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது.
- தேசிய சீனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஒடிசாவின் Tanvi Patri இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>><<<<<<

புதுதில்லியில் நடைபெற்று வரும் மாநில தலைமைச்செயலாளர்களின் தேசிய மாநாட்டின் நிறைவுநாள் அமர்வு இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெறவுள்ளது.

நேற்று நடைபெற்ற அமர்வுகளில் பங்கேற்ற பிரதமர், நிர்வாக சீர்திருத்தங்கள், நல்லாட்சி குறித்து அதிகாரிகளுடன் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை தாம் மேற்கொண்டதாக சமூகவலைதளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் தொடங்கிய இந்த மாநாட்டில், மத்திய - மாநில அரசுகளுக்கு இடையே வலுவான ஒருங்கிணைப்பை உருவாக்கி, நாட்டின் வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது தொடர்பாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

>>>>>>><<<<<<

இண்டிகோ விமான நிறுவனத்தின் சேவைகளில் அண்மையில் ஏற்பட்ட இடையூறுகள் குறித்து விசாரணை நடத்திய குழு, தனது அறிக்கையை மத்திய அரசிடம் தாக்கல் செய்துள்ளது.

சிவில் விமான போக்குவரத்து இயக்குநரகத்தின் இணை இயக்குநர் திரு. Sanjay Bramhane தலைமையிலான குழு, நாடுமுழுவதும் நடைபெற்ற விமான போக்குவரத்து சேவை குறித்து விரிவாக விசாரணை நடத்தியுள்ளது.

விமான செயல்பாடுகளில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறுகள், பணியாளர்கள் பற்றாக்குறை மற்றும் நிர்வாக குளறுபடிகள் என அனைத்து கோணங்களிலும் இந்தக் குழு ஆய்வு மேற்கொண்டது.

விசாரணைக் குழு அளித்துள்ள அறிக்கையின் அடிப்படையில், விமான போக்குவரத்து விதிமுறைகள் மீறப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட நிறுவனம் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>>>>><<<<<<

தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம், அஸ்ஸாம் மாநிலங்களில் அடுத்த ஆண்டு சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அதற்கான யுக்திகளை வகுக்க பிஜேபி மூத்த தலைவர் திரு. அமித் ஷா, இம்மாநிலங்களின் கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தவுள்ளார்.

இதன் ஒரு பகுதியாக இன்று அஸ்ஸாம் மாநிலம் செல்லும் அவர், அங்கு இரண்டு நாட்கள் தங்கியிருந்து மாநில பிஜேபி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தவுள்ளார்.

வரும் செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் மேற்குவங்கம் செல்லும் அவர், அம்மாநிலத்திற்கான பிஜேபி பொறுப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கு எதிரான அரசியல் யுக்திகளை வகுப்பது தொடர்பாக விரிவாக ஆலோசனை நடத்தவுள்ளார்.

அடுத்த மாதம் முதல் வாரம் தமிழகம் மற்றும் கேரளாவில் பயணம் மேற்கொள்ளவுள்ள திரு. அமித் ஷா, பிஜேபி நிர்வாகிகளுடன் தேர்தல் மற்றும் கூட்டணி தொடர்பான ஆலோசனைகளை மேற்கொள்ளவுள்ளார்.

>>>>>>>><<<<<<

ஆரவல்லி மலைத்தொடரின் வரையறையில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் குறித்து, உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணை நடத்த முடிவு செய்துள்ளது.

தலைமை நீதிபதி சூர்யகாந்த் மற்றும் நீதிபதிகள் ஜே.கே. மகேஷ்வரி, ஏ.ஜி. மாசி ஆகியோர் அடங்கிய விடுமுறை கால அமர்வு நாளை இந்த வழக்கை விசாரிக்கவுள்ளது.

ஆரவல்லி மலைத்தொடரின் புதிய வரையறைக்கு எதிராக ராஜஸ்தான், ஹரியானா மாநிலங்களில் அரசியல் கட்சிகளும் பொதுமக்களும், சுற்றுச் சூழல் அமைப்புகளும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

நில மட்டத்திலிருந்து 100 மீட்டர் உயரத்திற்கு மேல் உள்ள நிலப்பகுதிகள் மற்றும் அதனுடன் இணைந்த சரிவுகளை ஆரவல்லி மலைகள் என வரையறுப்பதில் ஏற்பட்டுள்ள

மாற்றங்கள், சுரங்கப் பணிகள் மற்றும் கட்டுமான செயல்பாடுகளை சட்டபூர்வமாக்கிவிடும் என்று பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

>>>>>>>><<<<<<

ஜம்மு காஷ்மீரின் ஜம்மு பகுதியில் பதுங்கியுள்ள பாகிஸ்தானிய பயங்கரவாதிகளை தேடி அழிக்கும் பணியில் இந்திய ராணுவம் ஈடுபட்டுள்ளது.

குறிப்பாக, கிஷ்துவார் மற்றும் டோடா மாவட்டங்களில் உள்ள அடர்ந்த காடுகள் மற்றும் மலைப்பகுதிகளில் இந்த தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.

பல்வேறு உளவு அமைப்புகள் அளித்துள்ள தகவலின்படி, சுமார் 30 முதல் 35 பாகிஸ்தானிய பயங்கரவாதிகள் ஜம்மு பகுதியின் பல்வேறு இடங்களில் மறைந்திருப்பது தெரியவந்துள்ளது.

குளிர்காலத்தைப் பயன்படுத்தி பாதுகாப்புப் படையினரின் பார்வையில் படாமல் மறைவிடங்களில் தஞ்சம் புக முனையும் இவர்களை ஒழிக்க இராணுவப் பிரிவுகள் தற்போது பனிபடர்ந்த உயரமான மலைப்பகுதிகளில் களமிறங்கியுள்ளன.

பயங்கரவாதிகளின் நடமாட்டம் மற்றும் அவர்களின் பதுங்கு குழிகள் குறித்த துல்லியமான தகவல்களை உளவு அமைப்புகள் ஒருங்கிணைத்து வழங்கி வருகின்றன

>>>>>>>><<<<<<

மியான்மரில் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, இன்று பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது.

ராணுவ ஆட்சியின் கீழ், மூன்று கட்டங்களாக நடைபெறும் இந்த தேர்தலில், திரு. Aung San Suu Kyi தலைமையிலான கட்சி போட்டியிட தடை விதிக்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெறவுள்ள முதற்கட்ட தேர்தலில் 330 நகரங்களில் 102 இடங்களில் மட்டுமே வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

உள்நாட்டு போர் மற்றும் பாதுகாப்பு காரணங்களால், 56 நகரங்களில் வாக்குப்பதிவு ரத்து செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது கட்ட தேர்தல் அடுத்த மாதம் 11ஆம் தேதியும், இறுதிகட்ட தேர்தல் 25ஆம் தேதியும் நடைபெறவுள்ளது.

>>>>>>>><<<<<<

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் ஈரான் முழுஅளவிலான போரில் ஈடுபட்டுள்ளதாக அதிபர் திரு. Masoud Pezeshkian தெரிவித்துள்ளார்.

ஈரானின் உயர் தலைவர் திரு. அயத்துல்லா அலி காமேனியின் அதிகாரப்பூர்வ வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ள நேர்காணலில் இதனை அவர் கூறியுள்ளார்.

இந்த மோதலானது, 1980களில் 10 லட்சம் பேரை இழக்க காரணமான, ஈரான் - ஈராக் போரை விட மிகவும் சிக்கலானது மற்றும் சவாலானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கத்திய நாடுகள் ஈரானின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்க விரும்புவதாகவும், அதன் ஒரு பகுதியாகவே, அந்நாடுகள் மறைமுகப் போரை நடத்தி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

>>>>>>><<<<<<

கிழக்கு ஐரோப்பாவில் கடந்த நான்காண்டுகளாக தொடர்ந்து வரும் ரஷ்யா - யுக்ரைன் இடையேயான போர் உச்சகட்டத்தை எட்டியுள்ளது.

யுக்ரைன் தலைநகர் Kyiv மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளை குறிவைத்து, இன்று அதிகாலை ரஷ்யப்படைகள் பல மணிநேரம் வான் தாக்குதலை நடத்தின.

நீண்ட தூர ஏவுகணைகள் மற்றும் ஆள்இல்லா ட்ரோன்கள் மூலம் நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் ஏராளமான கட்டிடங்கள் சேதமடைந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டின் மிக நீண்ட நேர தாக்குதல இது என்று செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

>>>>>>><<<<<<

தைவானில் நேற்றிரவு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவையில், 7 ஆக பதிவாகியுள்ளது.

கடலுக்கு அடியில் 73 கிலோமீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கத்தின் மையம் அமைந்திருந்த அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தின் தாக்கம், தலைநகர் தைபே உட்பட பெரும்பாலான பகுதிகளில் உணரப்பட்டது.

நிலஅதிர்வால் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்கள் குலுங்கியதால், மக்கள் அச்சமடைந்து சாலைகளில் தஞ்சமடைந்தனர்.

நிலநடுக்கத்தால் ஒரு சில இடங்களில் எரிவாயு குழாய் மற்றும் குடிநீர் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டுள்ள தைபே மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<

இத்தாலியின் சிசிலி தீவில் அமைந்துள்ள உலக புகழ்பெற்ற Mount Etna எரிமலை மீண்டும் சீற்றம் அடைந்துள்ளது.

நேற்று முதல் இந்த எரிமலையில், வடகிழக்கு பள்ளத்திலிருந்து லாவா குழம்புகளும், சாம்பலும் வெளியேறி வருகின்றன.

காற்றில் பரவும் எரிமலை சாம்பல், வடகிழக்கு திசையை நோக்கி நகர்ந்து வருவதாக அந்நாட்டின் புவியியல் மற்றும் எரிமலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, புகழ்பெற்ற சுற்றுலா தலமான Taormina மற்றும் அதன் அருகில் உள்ள பனிச்சறுக்கு விளையாட்டு பகுதிகளில் சாம்பல் மழை பெய்து வருகிறது.

மேலும், எரிமலையின் மற்றொரு பள்ளத்தில் சிறிய அளவிலான வெடிப்புகள் ஏற்பட்டு, வெப்ப துகள்கள் பல மீட்டர் தூரத்திற்கு சிதறி வருவதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

>>>>>>><<<<<<

ஜப்பானின் வடமேற்குப் பகுதியில் பெய்து வரும் கடும் பனிப்பொழிவு காரணமாக, அதிவேக நெடுஞ்சாலையில் 67 வாகனங்கள் ஒன்றோடொன்று மோதியதால், கோர விபத்து ஏற்பட்டது.

டோக்கியோவிலிருந்து சுமார் 160 கிலோமீட்டர் தொலைவில் உள்ள Minakami நகருக்கு அருகில் உள்ள Kanetsu நெடுஞ்சாலையில், நேற்றிரவு இந்த விபத்து நிகழ்ந்தது.

இரண்டு கனரக லாரிகள் மோதிக்கொண்ட விபத்தில், அடுத்தடுத்து வந்த வாகனங்கள் கட்டுப்பாட்டை இழந்து, ஒன்றன்பின் ஒன்றாக மோதியதால், அந்த சாலையே, வாகனக் குவியலாக காட்சியளித்தது.

இந்த விபத்தை அடுத்து ஏற்பட்ட தீ காரணமாக, 20 வாகனங்கள் முழுமையாக சேதமடைந்தன.

இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில், 26 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

>>>>>>><<<<<<

தேசிய சீனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஒடிசாவின் Tanvi Patri இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்

விஜயவாடாவில் நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் அவர் 18-21, 21-12, 21-15 என்ற செட்கணக்கில் மஹாராஷ்ட்ராவின் Sruti Mundada-வை வென்றார்.

>>>>>>><<<<<<

*இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான நான்காவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று திருவனந்தபுரத்தில் நடைபெறுகிறது.*

*ஐந்து போட்டிகளைக் கொண்ட தொடரில் இதுவரை நடைபெற்ற மூன்று போட்டிகளிலும் இந்தியா வெற்றிபெற்று, 3-0 என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலையில் உள்ளது.*

*>>>>>>><<<<<<*

*ஐ.சி.சி. உலக கோப்பை மற்றும் தென்னாப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள, 19 வயதுக்குட்பட்டோருக்கான இந்திய கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>>>END<<<<<<*